**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**இரண்டாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**மே, சூன் – 2019**

**P202 சமயத் தமிழ் இலக்கியம்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

## பிரிவு – 1

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. தமிழர் நிலத்தை எத்தனையாகப் பகுத்தனர்?
2. முக்கண்ணன் என அழைக்கப்பட்டவர் யார்?
3. "நுதல் விழி நாட்டத்து இறைவன்" என்ற வரிகள் இடம் பெற்ற நூல் எது?
4. அற்புதத் திருவந்தாதியின் ஆசிரியர் யார்?
5. மாணிக்கவாசகர் இயற்றிய நூல் எது?
6. தாமரைக்கண்ணன் எனத் திருக்குறள் யாரைக் குறிப்பிடுகிறது?
7. "சூடிக்கொடுத்த சுடர்கொடி" யார்?
8. திவ்விய தேசங்கள் எத்தனை?
9. இந்தியாவில் சமணம் தழைத்தோங்கியது எப்போது?
10. நம்பியகப்பொருளின் ஆசிரியர் யார்?
11. பௌத்தம் வேரூன்றக் காரணமான அரசன் யார்?
12. வீரசோழியத்தின் ஆசிரியர் யார்?
13. தமிழில் தோன்றிய முதல் புதினம் எது?
14. முகைதீன் பிள்ளைத்தமிழின் ஆசிரியர் யார்?
15. அப்துல் ரகுமானின் படைப்புகளுள் ஒன்றினைக் குறிப்பிடுக.

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக.** **(5x3=15)**

1. திருநாவுக்கரசரின் வேறு பெயர்கள் எவை?
2. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை – குறிப்பு வரைக.
3. முதல் ஆழ்வார்கள் யாவர்?
4. வைணவப் புலவர்கள் இயற்றிய இலக்கண நூல்கள் எவை?
5. தமிழில் தோன்றிய சமணக் காப்பியங்கள் குறித்து எழுதுக.
6. பௌத்த சமயக் கோட்பாடுகளுள் சிலவற்றைக் குறிப்பிடுக.
7. கிறித்துவர்கள் கையாண்ட சிற்றிலக்கியங்கள் எவை?
8. சதாவதானி யார்? அவர் வேறு எவ்வாறு அழைக்கப்பட்டார்?

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக.** **(3x15=45)**

1. (அ) குமரகுருபரரின் சைவத்தமிழ்த் தொண்டு குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) நம்மாழ்வாரும் திருமங்கையாழ்வாரும் ஆற்றிய சமயப் பணிகளை விவரிக்க.

2. (அ) சமண நிகண்டுகள் குறித்து விவரிக்க.

(அல்லது)

(ஆ) குண்டலகேசியும் பௌத்தமும் குறித்துக் கட்டுரை வரைக.

3. (அ) புதின இலக்கியத்தில் கிறித்துவர்களின் பணி குறித்து விவரிக்க.

(அல்லது)

(ஆ) புதுக்கவிதையில் இஸ்லாமியர்களின் பங்கு குறித்துக் கட்டுரை வரைக.

* * *